இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 260 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – சித்திரை 18 – வெள்ளிக்கிழமை 01 மே 2026 – சென்னை 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 260 : Thiruvalluvar Year - 2057 - Chithirai 18 - Friday 01 May 2026 - Chennai 10 Pages ₹ 5.00


## உழைப்பையும், உழைப்போரையும் கொண்டாடும் இந்த மே நாளில்

# தி.மு.கழகம் தொழிலாளர்களின் உண்மைத் தோழனாக என்றென்றும் திகழும்!



கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை அண்ணா அறிவாலயத்தில் கழகப் பொதுச் செயலாளரும் காட்பாடி தொகுதி கழக வேட்பாளருமான அமைச்சர் துரைமுருகன் அவர்கள் சந்தித்து பொன்னாடை அணிவித்தார். உடன் அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் உள்ளார்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் மே தின வாழ்த்துச் செய்தி!

**சென்னை, மே 1-**

**“உழைப்பையும், உழைப்போரையும் கொண்டாடும் இந்த மே நாளில் தி.மு. கழகம் தொழிலாளர்களின் உண்மைத் தோழனாக என்றென்றும் திகழும்” என்று கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள மே தின வாழ்த்துச் செய்தியில் உறுதிபடக் கூறியுள்ளார்.**

**இதுகுறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள மே தின வாழ்த்துச் செய்தி வருமாறு:-**

உழைப்பு என்பது மனித இனத்தின் வளர்ச்சிக்கு மட்டுமின்றி, அதன் அரசியல், சமூகப் பரிணாமத்திற்கும் அடிப்படைக் காரணியாக இருக்கும் உந்து சக்தியாகும். உலகினை உழைப்பால் செலுத்தும், உலகினுக்குத் தங்கள் வியர்வையால் உயிரூட்டும் பாட்டாளி வர்க்கத்தினருக்கு எனது உழைப்பாளர் நாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழிலாளர்களுக்காக மே நாளில் ஊதியத்துடன் கூடிய விடுமுறை, சென்னையில் மே தினப் பூங்கா, தொழிலாளர் நல வாரியம் என எண்ணற்ற பங்களிப்புகளைக் கழக ஆட்சிதோறும் பேரறிஞர் அண்ணா அவர்களும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் செய்து வந்தனர்.

### வரலாற்றின் பக்கங்களில் பொன்னெழுத்துகளாக மின்னுகிறது!

‘தந்தை பெரியாரையும், பேரறிஞர் அண்ணாவையும் சந்தித்திருக்காவிட்டால் நானும் கம்யூனிஸ்டாகத்தான் ஆகி இருப்பேன்’ என்று சொன்ன தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையில் ஆட்சி அமைந்த போதெல்லாம் தொழிலாளர் நலம்காக்க எண்ணற்ற திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றியது வரலாற்றின் பக்கங்களில் பொன்னெழுத்துகளாக மின்னிக் கொண்டிருக்கிறது.

அந்த வழித்தடத்தில்தான் திராவிட மாடல் அரசிலும், இந்தியாவுக்கே வழிகாட்டும் பல தொழிலாளர் நலத்திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளோம். கழனியிலும் தொழிற்சாலைகளிலும் பாடுபடும் உழைப்பாளத் தோழர்களின் நலன்களைப் பாதுகாப்பது போலவே, தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்றுள்ள பெண்கள் மற்றும் திருநங்கைகள் புதிய ஆட்டோ ரிக்சா வாங்க மானியம், பதிவுபெற்ற அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கி, அமைப்பு சாரா தொழிலாளர்களின் நலன்களையும் பாதுகாக்கிறோம்.

### சென்னையில் கார்ல் மார்க்சுக்கு சிலை!

அதோடு, இணையம் சார்ந்த கிக் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாத்திடவும் நலவாரியம் உருவாக்கப்பட்டு, அதில் பதிவு செய்த தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் புதியதாக e Scooter வாங்க மானியம் வழங்கும் புதிய திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டது.

அதுமட்டுமின்றி, அவர்கள் பணிகளுக்கிடையே ஓய்வு எடுக்கும் வகையில் அனைத்து வசதிகளுடன் கூடிய ஓய்வுக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இப்படி சாதனைகள் பல படைத்தும், பாட்டாளி மக்களின் உயர்வுக்கு நாம் கொண்டுள்ள உறுதியை வெளிப்படுத்தும் விதமாகவும், “உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள், நீங்கள் இழப்பதற்குக் கை விலங்குகளைத் தவிர எதுவுமில்லை” என அழைத்த உலக மாமேதை கார்ல் மார்க்சுக்குச் சென்னையில் சிலை அமைத்துள்ளோம். இப்படி, சொல்லாலும் – செயலாலும் – வரலாற்றுச் சின்னங்களாலும் உழைப்பாளர்களையும் உழைப்பையும் போற்றுகிறோம்.

உழைப்பையும், உழைப்போரையும் கொண்டாடும் இந்த மே நாளில், திராவிட முன்னேற்றக் கழகம் தொழிலாளர்களின் உண்மைத் தோழனாக என்றென்றும் திகழ்ந்திடும் என்ற உறுதியையும், உழைக்கும் தோழர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினர் அனைவருக்கும் உளமார்ந்த வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

---

## 2026 சட்டமன்றத் தேர்தல்: கழகத் தலைவர்,

# முதல்வர் மு.க.ஸ்டாலினுடன் அமைச்சர்கள் - கழக வேட்பாளர்கள் சந்திப்பு!

### தேர்தல் நிலவரம் குறித்து முதல்வர் கேட்டறிந்தார்!

**சென்னை, மே 1-**

**கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை அண்ணா அறிவாலயத்தில் நேற்று அமைச்சர்கள், கழக வேட்பாளர்கள் சந்தித்துப் பேசினர்.**

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்குப் பதிவு ஏப். 23 ஆம் தேதி ஒரே கட்டமாக நடைபெற்றது. மொத்தம் உள்ள 234 தொகுதிகளில் 4,023 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

தமிழகம் முழுவதும் 75,064 வாக்குச்சாவடிகளும், 41 வாக்கு எண்ணிக்கை மையங்களும் அமைக்கப்பட்டிருந்தன. வாக்கு எண்ணிக்கை மே 4ஆம் தேதி நடைபெறுகிறது.

தமிழகத்தில் கடந்த பல நாள்களாகவே தேர்தல் பிரச்சாரம் சூடு பிடித்திருந்த நிலையில் உச்சகட்டத்தை அடைந்தது. தி.மு.க. தலைவரும் முதல்வருமான மு.க. ஸ்டாலின் அவர்கள், தில்லி முன்னாள் முதல்வர் அரவிந்த் கெஜரிவாலுடன் சென்னையில் சாலைப் பேரணியில் பங்கேற்று வாக்கு சேகரித்தனர். நடந்து சென்றும் பிரச்சாரம் மேற்கொண்டனர்.

காங்கிரஸ் மூத்த தலைவரும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி தமிழகத்தில் மூன்று இடங்களில் பிரச்சாரம் மேற்கொண்ட நிலையில், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து நடைபெற்ற பிரச்சார பொதுக்கூட்டங்களில் பங்கேற்றுப் பேசினார்.

வாக்குப் பதிவு கடந்த 23ந் தேதியன்று நடைபெற்ற நிலையில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை கழகப் பொதுசெயலாளர் - அமைச்சர் துரைமுருகன் நேரில் சந்தித்தார். இதனைத் தொடர்ந்து அமைச்சர்கள் எ.வ. வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கே.ஆர்.பெரியகருப்பன், சு.முத்துசாமி, சிவ.வீ.மெய்யநாதன், சி.வி.கணேசன் மற்றும் முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, புதுச்சேரி மாநில சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் இரா. சிவா உள்ளிட்டோரும் முதலமைச்சரைச் சந்தித்தனர்.

இதேபோல், வேட்பாளர்கள் சபா. ராஜேந்திரன், தமிழரசி, நாமக்கல் ராணி, டி.ஜெ.கோவிந்தராஜன், காதர்பாட்சா முத்துராமலிங்கம், கே.எஸ்.மூர்த்தி, ஆஸ்டின், மகேஷ், மணிகண்டன், எஸ்.ஏ. சத்யா ஆகியோரும் முதலமைச்சரை சந்தித்தனர்.

அப்போது தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்புக்குழு தலைவர் டி.கே.எஸ் இளங்கோவன் மற்றும் தலைமை நிலையச் செயலாளர்கள் பூச்சி முருகன், துறைமுகம் காஜா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

---

## அமலாக்கத்துறை

### பா.ஜ.க.,வின் தேர்தல் பிரச்சார பிரிவாக மாறியுள்ளது!

### டெல்லி முன்னாள் துணை முதலமைச்சர் மணிஷ் சிசோடியா விமர்சனம் !

*புதுடெல்லி, மே 1-*

*அமலாக்கத்துறை தற்போது பா.ஜ.க., வின் தேர்தல் பிரச்சார பிரிவாக மாறியுள்ளது என்று டெல்லி முன்னாள் துணை முதலமைச்சர் மணிஷ் சிசோடியா குற்றம்சாட்டியுள்ளார்.*

*தேர்தலில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சிக்கு பணியாற்றிய தனியார் நிறுவன இயக்குநர் கடந்த 13 ஆம் தேதி கொல்கத்தாவில் கைது செய்யப்பட்டார். தேர்தலுக்கு முதல் நாள் அவரது ஜாமின் மனு டெல்லி நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது.*

*இந்நிலையில், டெல்லி பாட்டியாலா நீதிமன்றத்தில் வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தபோது அமலாக்கத்துறை எதிர்ப்பு எதுவும் தெரிவிக்கவில்லை. இதனைத் தொடர்ந்து அவருக்கு ஜாமின் வழங்கி நீதிமன்றம் உத்தரவிட்டது. இதனை குறிப்பிட்டு தனது சமூகவலைதளப் பக்கத்தில் கருத்து பதிவிட்டுள்ள ஆம் ஆத்மி கட்சியின் செய்தி தொடர்பாளரும், டெல்லி முன்னாள் துணை முதலமைச்சருமான மணீஷ் சிசோடியா, அமலாக்கத்துறை தற்போது பா.ஜ.க.,வின் தேர்தல் பிரச்சாரப் பிரிவாக மாறிவிட்டது என்று விமர்சித்துள்ளார்.*

---

## ஒன்றிய அரசைக் கண்டித்து

# மே 13ம் தேதி டெல்லியில் விவசாயிகள் - தொழிலாளர் சங்கங்கள் மாபெரும் போராட்டம்!

புதுடெல்லி, மே 1-

இந்திய உழைக்கும் வர்க்கத்தின் மீதான ஒன்றிய பாஜக அரசின் தொடர் அடக்குமுறைகள் மற்றும் கார்ப்பரேட் சார்பு கொள்கைகளுக்கு எதிராக மத்திய தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு மற்றும் விவசாய சங்கங்களான சம்யுக்த கிசான் மோர்ச்சா ஆகிய அமைப்புகள் ஒன்றிணைந்து அறிக்கை வெளியிட்டுள்ளன.

தற்போது நிலவும் எரிபொருள் விலை உயர்வு மற்றும் பணவீக்கம் காரணமாகப் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், அவர்கள் பணியாற்றிவரும் இடத்திலிருந்து மீண்டும் வெளியேறும் அவல நிலை ஏற்பட்டுள்ளதாக கூறியுள்ளன. இதனை எதிர்கொள்ளவும், ஒன்றிய பா.ஜ.க. அரசின் பிடிவாதத்தை முறியடிக்கவும் இன்று மே தினப் பேரணி நடைபெற இருப்பதாகவும் இதில் விவசாயி களும் பெருந்திரளாகப் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக மே 13ம் தேதி தலைநகர் டெல்லியில் மாபெரும் போராட்டம் நடத்தப்படும் என்றும் தொழிற்சங்கங்கள் மற்றும் விவசாயிகள் அமைப்புகள் அறிவித்துள்ளன.

---

## தீவிரவாதத்தை போதிக்கும் பாகிஸ்தானுக்கு ராஜ்நாத் சிங் நற்சான்றிதழ் தந்தது தேசவிரோதம்! காங்கிரஸ் கடும் விமர்சனம்!

புதுடெல்லி, மே 1–

“தீவிரவாதத்தை போதிக்கும் பாகிஸ்தானுக்கு அமைச்சர் ராஜ்நாத் சிங் நற்சான்றிதழ் தந்தது தேச விரோதம் என காங்கிரஸ் சாடி உள்ளது. கிர்கிஸ்தானின் பிஷ்கெக் நகரில் நடந்த ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் கூட்டத்தில் பேசிய ஒன்றிய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், ”அரசு ஆதரவுடனான எல்லை தாண்டிய தீவிரவா தத்தை ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு கவனத்தில் இருந்து இழக்க கூடாது. இந்த அச்சுறுத்தலை எதிர்த்து போராடுவதில் எந்த இரட்டை நிலைப்பாட்டுக்கும் இடமில்லை என்றார். தீவிரவாத மையங்கள் இனி தண்டனையில் இருந்து விடுபடாது என்பதற்கு இந்தியாவின் ஆபரேஷன் சிந்தூர் அதற்கு எடுத்துக் காட்டு என பேசியிருந்தார். (ஆனால் அவர் நேரடியாக பாகிஸ்தானின் பெயரை குறிப்பிடவில்லை. )

இதுகுறித்து காங்கிரஸ் பொது செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் தன் எக்ஸ் பதிவில், ”பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், பிரதமரின் ஒப்புதல் மற்றும் தூண்டுதலுடன், பிஷ்கெக்கில் பேசும்போது, பாகிஸ்தானுக்கு வெட்கக்கேடான முறையில் நற்சான்றிதழ் கொடுத்துள்ளார். பாகிஸ்தான் பயங்கரவாதத்தின் மையமாக இல்லையா? இந்தியாவை குறி வைத்து தாக்குதல் நடத்தும் பயங்கரவாத மையங்கள் பாகிஸ்தானில் இல்லையா? பாகிஸ்தானில் இந்திய எதிர்ப்பு சித்தாந்த பயிற்சி இல்லையா? மும்பை, காஷ்மீரின் பஹல்காமில் திட்டமிட்டு பயங்கரவாதிகளால் தாக்குதல் நடத்தப்படவில்லையா? பாகிஸ்தான் தொடர்பான இந்த புதிய நிலைப்பாடு, அமெரிக்காவை திருப்திப்படுத்துவது மற்றும் சீனாவிடம் சரணடைதல் ஆகியவற்றில் பிரதமர் மோடியின் கொள்கையின் ஒருபகுதியாகும். பாகிஸ்தானுக்கு பாதுகாப்பு அமைச்சர் கொடுத்துள்ள நற்சான்றிதழ், கடந்த 2020 ஜூன் 19ல் சீனாவுக்கு பிரதமர் மோடி வழங்கிய விநோதமான நற்சான்றிதழ் போல தேச விரோதமானது. வெட்கக்கேடானது என கேள்விகளுடன் காட்டமாக விமர்சித்துள்ளார்.